விலை: 40.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 123 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 08 வியாழக்கிழமை (21.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## ஜனாதிபதி கோட்டா பதவி விலகத் தயார்

**சபாநாயகரிடம் அறிவித்துள்ளதாக சபையில் எதிர்க்கட்சித் தலைவர்**

(கொழும்பு)

அனைத்துக் கட்சித் தலைவர்களும் தன்னை பதவி விலகுமாறு கோரினால் அதற்கு தயார் என சபாநாயகரிடம் ஜனாதிபதி அறிவித்துள்ளார் என நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் நிலைமை மேலும் மோசமடையும்

**ஐ.தே.தலைவர் ரணில் எச்சரிக்கை**



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நாட்டில் கொதிநிலையை ஏற்படுத்தி 15

**ரம்புக்கனை விவகாரம்**

## 20 பேர் அடங்கிய குழு நியமனம்

(கொழும்பு)

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் ஆராய 20 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட் 15

## நாட்டின் சில பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு




(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் சில பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக் 15

# 'நீங்கள் சபாநாயகர் அல்ல அப்பட்டமான பொய்யர்'

## எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகருடன் சபையில் கடுமையான வாக்குவாதம்



"நீங்கள் சபாநாயகர் அல்ல; அப்பட்டமான பொய்யர்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் நேற்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை பார்த்து தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

இன்று முதல்
புத்தாண்டு பலன்கள்
உங்கள் வலம்புரியில்

**"ஒரே நாடு ஒரே சட்டம்"**

## செயலணி உறுப்பினர் பதவி விலகல்

(கொழும்பு)

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் உறுப்பினர் பதவியிலிருந்து அஸீஸ் நிஸாருத்தீன் விலகியுள்ளார்.

அரசாங்கத்தின் 15

## போதுமான உத்தரவாதங்கள் தேவைப்படும்

### இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம்




(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் தொடர்பில் இலங்கையுடனான கலந்துரையாடல்கள் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் நாட்டின் கடன்களை நிலையான பாதையில் கொண்டு செல்ல முடியும் என்பதற்கான "போதுமான உத்தரவாதங்கள்" தேவைப்படும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள் 15

## திருநெல்வேலியில் விரிவுரையாளர் வீட்டில் சுமார் ரூ.1 கோடி பெறுமதியான தங்க நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள விரிவுரையாளர் ஒருவரின் வீடுடைத்து சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள 15

## 12ஆவது நாளாக தொடரும் அரசுக்கு எதிரான போராட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளடங்கலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாட்டின் பல 15

## இது ராஜபக்ச நாடு அல்ல; குடும்ப ஆட்சிக்கு இடமில்லை

**சபையில் அனுர பிரியதர்சன யாப்பா**

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமாக செயற்படுவதாக கூறி வெளியேறிய அணியினருக்கும் இடையில் நேற்று பாராளுமன்றில் வாதவிவாதம் இடம்பெற்றது.

முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் அவைத் தலைவர் தினேஸ் குணவர்த்தன ஆகியோருக்கு இடையிலேயே 15

**ரம்புக்கனை வன்முறை தொடர்பில்**

## மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவருடன் அமெரிக்க தூதுவர் பேச்சு



(கொழும்பு)

நிராயுதபாணியான எதிர்ப்பாளர்களுக்கு எதிரான வன்முறை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரோகினி மாரசிங்கவை சந்தித்து நேற்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியோன் சுங் கலந்துரையாடியுள்ளார்.

ரம்புக்கனை வன்முறைகள் குறித்து முழுமையான, வெளிப்படையான விசாரணையின் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அமைதியின்மை

(கரணவாய்)

பருத்தித்துறை மந்திகையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று புதன்கிழமை இரவு அமைதியின்மை காணப்பட்டது.

மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இருப்பதாக சுமார் இரண்டு மணி நேரமாக பொதுமக்கள் காத்திருந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையம் மூடப்பட்டதாக மக்கள் கூறினர்.

அது மூடப்பட்ட நிலையிலும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இருப்பதாக தெரிவித்து பெருமளவான மக்கள் அங்கு கூடியிருந்தனர். (ம-7,60)



# சிங்களவர் ஆதரவு வழங்காவிட்டாலும் தமிழர்கள் ஆதரவு வழங்குவார்கள்



## அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்பில் சபையில் சாணக்கியன் எம்.பி

(கொழும்பு)

தமிழர்களின் போராட்டத்துக்கு சிங்கள மக்கள் ஆதரவளிக்காதபோதும், சிங்கள மக்களின் போராட்டத்துக்கு தமிழர்களும் ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் காலிமுகத்திடல் பக்கம் சென்றால் சுவையான உணவு உண்டுவிட்டு வரலாம். சமிந்த லக்சான் என்ற இளைஞரின் இழப்பிற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒருங்கிணைப்பாளராக பதவி வகித்ததையிட்டு கவலையடைகிறேன்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் இந்த அரசாங்கத்தின் படுகொலையினை 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து எதிர்கொண்டு வருகிறார்கள். 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த காலத்திலிருந்து பலர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

அளுத்கம, திகன உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் முஸ்லிம் சமூகத்தினர் இந்த நிலைமையை எதிர்கொண்டுள்ளார்கள்.

அக் காலப்பகுதியில் இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என தற்போது கவலையடையப் போவதில்லை.

மனிதப் படுகொலைக்கு எதிராக தற்போது சிங்கள மக்களுடன் ஒன்றிணைந்துள்ளோம். படுகொலைக்கு இனி இடமளிக்க முடியாது என்றார். (ம-7)


# மரண அறிவித்தல்

## திருமதி நவமணி பாக்கியநாதன்

(முன்னாள் பிரதம நூலகர் - யாழ்.மருத்துவபீடம், இலங்கை)


தோற்றம் 26.10.1938 மறைவு 19.04.2022

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி (யாழ்.) மற்றும் சிட்னியை (அவுஸ்திரேலியா) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி பாக்கியநாதன் அவர்கள் கடந்த 19.04.2022 அன்று சிட்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கலாநிதி வே.இ.பாக்கியநாதனின் (முன்னாள் உப அதிபர் - யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, முன்னாள் பிரதம நூலகர்- யாழ்.பொதுசன நூல் நிலையம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தரணியகல க.மு.தம்பு - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் திருச்செல்வம் (லண்டன்), காலஞ்சென்ற பன்னீர்ச்செல்வம் (பிரான்ஸ்), அருட்செல்வம் (கனடா), காலஞ்சென்ற தம்புச்செல்வம், காலஞ்சென்ற கதிர்காமச்செல்வம் (லண்டன்), செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியராஜா, மோகனராஜா, மாலினி, நேசராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் யூடி, கிறிஸ்ணகலா, ராகுலன், சசீந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் அஷ்வின், மிதூஷன், ரூபிகா, தரன், நிஷா, ஷயன், காவியன், தரணிகா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சண்முகம், கனகம்மா, பரமநாதன், ராசாத்தி மற்றும் சரோஜினி (பிரான்ஸ்), சிவகாமசுந்தரி (கனடா), ரஞ்சிதகுமாரி (லண்டன்), விவேகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.04.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 - 4 மணிக்கு *Castlebrook Memorial Park, Rouse Hill* இல் இடம்பெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(11101) தொடர்புகளுக்கு:- +61 497 674 944


## ரம்புக்கனை விவகாரம்

# மன உளைச்சலுக்கு ஆளானேன் - மகிந்த



(கொழும்பு)

கேகாலை மாவட்டம் - ரம்புக்கனை பகுதியில் இடம்பெற்ற சம்பவத்திற்கு ஆழ்ந்த மன உளைச்சலுக்கு ஆளானதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

சம்பவங்கள் குறித்து பொலிஸாரால் பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என நம்புவதாகவும் கூறியுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ,

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தமது உரிமைகளை பாதுகாக்கும் வகையில் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



எங்கள் அன்புக்குரிய
திரு.சிவகுமார் (J/165) வட்டு.தெற்கு
மற்றும் (J/166) வட்டு.தென்மேற்கு
கிராம சேவகர் அவர்களின்
அருமைத் தந்தையார்

## திரு.குமாரசாமி சிவபாலன்

அவர்களின்
மறைவுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்கள்.
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!
தங்க. முகுந்தன் குடும்பம்
மூளாய், சுழிபுரம்.
077 727 9238. (C-4206)

தோற்றம் 03.08.1951 மறைவு 20.04.2022



## கிளி/சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை - பேராலை, பளை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


கஜீதரன் விதுர்சிகா 174


நியாந்தன் ஐதுசன் 160


திரு.நடராசா ராமதாஸ் (அதிபர்)


திருமதி கமலாதேவி பவநீதராசா (ஆசிரியர்)


கோணேஸ் அபிசயன் 130


ரவிச்சந்திரன் கேசவி 128


உதயகுமார் டிசாந்தன் 122

2021ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் **100%** சித்தி பெற்ற மேற்படி மாணவர்களையும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர், அதிபர் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஊடக அனுசரணை: திரு.சி.குணபாலசிங்கம், கனடா, இத்தாவில் Congratulations! (11086) பாடசாலைச் சமூகம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரமடையும் போராட்டங்கள்

## காலிமுகத்திடலில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த பௌத்த தேரர்



## நுவரெலியாவில்...



## திருமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்



## தலவாக்கலையில்...



எரிபொருள் தட்டுப்பாட்டால்

## கடலில் இருந்து தரைக்கு வந்த படகுகள்



## கோட்டாவின் உருவப்பொம்மை எரித்து ஹற்றனில் ஆர்ப்பாட்டம்



## ஆர்ப்பாட்டத்தால் முடங்கியது கேகாலை



## ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தின் வீடு முற்றுகை



## தங்காலையில் உள்ள மகிந்தவின் வீடு மீண்டும் முற்றுகை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# APL கிரிக்கெட் தொடர் றோயல் அணி வெற்றி



அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட APL சீசன் 2 போட்டியில் அருணோதயா Royal அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் அருணோதயா Rising Star அணியை எதிர்த்து அருணோதயா Royal அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அருணோதயா Rising Star அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 39 ஓட்டங்ளைப் பெற்றது.

அவ்வணி சார்பில் யதீசன் 12 ஓட்டங்களையும், தயேஸ் 10 ஓட்டங்களையும், சுரேன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் அருணோதயா Royal அணி சார்பில் தினேஸ் 2 விக்கெட்டுக்களையும், ரஞ்சித் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

39 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அருணோதயா Royal அணியினர் 7 ஓவர்கள் முடிவில் வெற்றியிலக்கை அடைந்தனர்.

அவ்வணி சார்பில் ரஞ்சித் 23 ஓட்டங்களையும், பாலு 12 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கிருபன், திலக்ஸன் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகன் ரஞ்சித் தெரிவு செய்யப்பட்டார். இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக முன்னாள் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணியின் தலைவரும், சர்வதேச கரப்பந்தாட்ட மத்தியஸ்தருமான நல்லையா சுதேஸ்குமார், கிரிக்கெட் வீரரும், 6 ஆம் வட்டார மாகாண சபை உறுப்பினருமான ப.பத்மமுரளி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(4-6-90)

# பெருந்துடுப்பாட்ட தொடர் இன்று ஆரம்பம்

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான பெருந்துடுப்பாட்டத்தொடர் இன்று, நாளை, நாளை மறுதினம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தற்கால சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் போட்டி நேரலையில் ஒளிபரப்பப்படும் எனவும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் அறிவித்துள்ளார். (4)

# லக்னோ அணியை வீழ்த்தி பெங்களூர் அணி வெற்றி!

இந்தியன் பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 18 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பாடிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பெங்களூர் அணி சார்பாக அணித்தலைவர் டு பிளெசிஸ் அதிரடியாக ஆடி 96 ஓட்டங்களையும் ஷாபேஸ் அகமட் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து 182 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய லக்னோ அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் லக்னோ அணி சார்பாக குருணால் பாண்டியா 42 ஓட்டங்களையும் கே.எல். ராகுல் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2566

சதுர்சன்





கபினா

நேர்மையாக இருப்பவர்களுக்கு
கோபம் அதிகமாக வரும்....
காரணம் அவர்களுக்கு
ஏமாற்றங்களை தாங்கும் சக்தி
இருப்பதில்லை......!

கஸ்தூரன்




தனுசன்




கேதாரன்




சுரேஜிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் மக்களுக்கு நேரடியாக உதவுங்கள்

## தமிழக முதலமைச்சரிடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை

(லண்டன்)

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்ற புலம் பெயர் தமிழ் மக்கள், தமிழக மக்கள் இணைந்து அனைத்துலக சமூகத்தின் பங்கு பற்றலுடன் ஒரு பொறிமுறையை உருவாக்குமாறு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் நாடு கடந்த தமிழீழ அரசு கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கடந்த 15 ஆம் திகதி கடிதமொன்றினை அனுப்பியிருந்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சிங்கள அரசாங்கங்கள் எவையும் தமிழ் மக்களை பாரபட்சமின்றி நீதியாக நடத்தப் போவதில்லை. இந்நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகளிலும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப் படுவார்கள்.

இந்நிலையில் நேரடி உதவிப் பொறிமுறை உருவாகும் நிலை தோன்றின் புலம்பெயர் தமிழ் மக்கள், தமிழக மக்கள், உலகத் தமிழ் மக்கள் இணைந்து ஈழத் தமிழ் மக்களை இன்றைய நெருக்கடியில் இருந்து காப்பாற்ற முடியும் என தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் மீதான சிங்கள அரசாங்கங்களின் இனவழிப்புப் போரும் பெரும் இராணுவச் செலவீனங்களும் தவறான கொள்கைளும் ஊழல் நிறைந்த நிர்வாகமும் கொரோனா உலகப்பெருந் தொற்று உருவாக்கிய தாக்கங்களும் இணைந்தே இப்பெரும் பொருளாதார நெருக்கடியினை உருவாக்கியுள்ளது.

ஈழத்தமிழர் தேசம் சிங்கள பேரினவாத அரசால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலையில், இப்பொருளாளர நெருக்கடி, இனவழிப்புப் போரால் பாதிப்புக்குள்ளாக் கப்பட்ட தமிழ் மக்களுக்கு இன்றைய நெருக்கடி இரட்டைச் சுமையாய் அமைந்துள்ளளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழ் மக்களுக்கான ஒரு நேரடி உதவிப் பொறிமுறையினை உருவாக்கும் முயற்சிக்குத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமை தாங்குமாறு கோரியிருந்த உருத்திரகுமாரன், இப்பொறிமுறையினை உருவாக்கும் முயிற்சியினைக் காலதாமதம் இன்றி ஆரம்பிப்பது ஈழத்தமிழ் மக்களுக்கு பெரும் நம்பிக்கையைத் தரும் எனத் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஈழத் தமிழர் தேசத்தின் உண்மை நிலைமையைக் கண்டறிவதற்கான குழு ஒன்றினை அங்கு உடன் அனுப்பி வைப்பதும் இம் முயற்சிக்கு வலுச் சேர்க்கும் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் நேரடி உதவிப் பொறிமுறை ஊடாக ஈழத்தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது பங்களிப்பை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார். ( நி-6)

# எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்கள் வன்முறையை தவிருங்கள்

## ஜனாதிபதி டுவிட்

(கொழும்பு)

அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் இலங்கை பிரஜைகளின் உரிமைக்கு இடையூறு ஏற்படாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ரம்புக்கனை சம்பவம் குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், ரம்புக்கனையில் நடந்த சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான விசாரணைகளை பொலிஸ் மேற்கொள்ளும் என தெரிவித்துள்ளார்.

குறித்த துயரச் சம்பவம் தொடர்பில் தான் கவலையடைவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்ப்புத் தெரிவிக்கும் அனைத்து பொதுமக்களும் வன்முறையை தவிர்க்குமாறு ஜனாதிபதி தனது டுவிட்டர் பதிவில் மேலும் கோரியுள்ளார். (நி-6)


# நீங்காத நினைவுகள்

மண்ணில்
15
09
1940



விண்ணில்
25
04
2019

அமரர். திருமதி. **தவராஜா சகுந்தலதேவி**

திதி 21.04.2022

எம்மைச் சுமந்த கருவூலமே ஆண்டுகள் மூன்று கடந்து விட்டது
ஆண்டவன் அடியில் நீங்கள் நெஞ்சம் கனக்கும் வேளையில்
உங்கள் நினைவுகள் வருடுகிறது என்றும் நீங்காத நினைவுகளுடன்

"ராஜாஸ் வாசம்"
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

பிள்ளைகள்.

(11000)


# இராசிபலன்

21.04.2022
சித்திரை 08, வியாழக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 2.52 மணிவரை

மூலம் பின்னிரவு 1.17 மணிவரை
சுபநேரம்- 7.31-9.01 மணிவரை
இராகுகாலம் -1.31-3.01 மணிவரை

சந்திராஷ்டமம்-
கார்த்திகை

வளவன்

**மேஷம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.

**கடகம்** பல நாட்களாக செய்ய நினைத்த வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பழைய கடன்களை அடைக்க புதிய வழி முறைகளை கையாள்வீர்கள்.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, அலைச்சல்கள் சற்றுக் கூடும்.

**ரிஷபம்** குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறையும், பயணங்களால் மனச்சோர்வு, அலைச்சல் என்பன ஏற்படலாம்.

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச்சொத்துக்களால் நன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள், அனைத்திலும் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கன்னி** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, மனதில் இனம் புரியாத கவலைகள், கற்பனைகள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு.

**மீனம்** மற்றவர்களின் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேமிப்பே உங்கள் முதல் செலவாக இருக்கட்டும்



அரசிற்கு எதிராக நாடுபூராக இடம் பெற்றுவரும் போராட்டத்திற்கு ஆதரவாக நேற்று நாடு தழுவிய ரீதியில் கதவடைப்பு போராட்டங்கள் இடம் பெற்றன.
(படங்கள்:- சிவசாந்தன், வசந்தரூபன், கஜிந்தன்)

## எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு

# மாட்டு வண்டியில் பாடசாலைக்கு சென்ற ஆசிரியர்கள்



(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் மாட்டு வண்டியில் பாடசாலைக்கு சென்ற சம்பவமானது நேற்று காலை தெல்லிப்பழையில் இடம்பெற்றுள்ளது.

எரிபொருட்களின் விலைகள் நாட்டில் உச்சம் தொட்டுள்ள நிலையில் விலையேற்றத்தை பிரதிபலிக்கும் முகமாக குறித்த ஆசிரியர்கள் இவ்வாறு மாட்டு வண்டியில் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர்களே இவ்வாறு மல்லாகம் சந்தியில் இருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வரை மாட்டு வண்டியில் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.(4-6-18-33-104)



நீண்டகாலமாக மலசலகூடம் இன்றி பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வந்த குடும்பத்திற்கு மானிப்பாய் இந்து கல்லூரி 89/90 பழைய மாணவர்களின் உதவும் கரங்கள் அமைப்பு வழங்கிய ரூபா ஒரு லட்சத்து 20 ஆயிரம் நிதியில் மலசலகூடம் நிர்மாணித்து அவர்களிடம் கையளிக்கப்பட்டது.
(படம்-மகாலிங்கம்)

# வங்கி ஊழியர் சங்கத்தினர் வவுனியாவில் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு அண்மையில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம், தட்டுப்பாடு போன்றவற்றிக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள், பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக இன்று அனைத்து மக்களும் கடும் பாதிப்புக்களை சந்தித்து வருகின்றனர்.

இதனால் வங்கி வலையமைப்பிற்கும் பாதிப்பு ஏற்படும் அபாய நிலைமை காணப்படுகின்றது. எனவே நாட்டையும், மக்களையும் படுகுழியில் தள்ளிய இந்த அரசு உடனடியாக பதவி விலக வேண்டும்.

இந்த நாட்டை கட்டி எழுப்ப வேண்டியது அனைவரது தலையாய கடமை. அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தனர். (4-6-250-299)



யாழ்.பிரதேச செயலகமும் முதியோர் சங்கமும் கடந்த வருடம் இணைந்து நடத்திய சிறந்த சேவையாளருக்கான தெரிவில் லயன் கலாநிதி ரஞ்சன் சிறந்த சேவையாளராக தெரிவு செய்யப்பட்டார்.

# பூந்துணர் நறவம் மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

பூநகரி பிரதேச கலாசார பேரவையினால் 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ள பூந்துணர் நறவம் 12 பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

கோரப்படும் ஆக்கங்களில்,

கட்டுரை 500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும், கவிதை 40 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும், சிறுகதை 500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும், குறுநாடகம் நான்கு காட்சிகளுக்கமேற்படாதிருத்தல் வேண்டும், நேர்காணல்கள் 500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும், விவரணங்கள் 500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

ஆக்கங்கள் சமூகத்தின் பாரம்பரியங்களையும் வழக்காறுகளையும் கலைகளையும் வெளிப்படுத்துவனவாக விருத்தல் வேண்டும்.

பிரதேச அபிவிருத்திக்கான மூலோபாயங்களை தற்காலத்திற்கேற்ற வகையில் வெளிப்படுத்துவனவாகவிருத்தல் வேண்டும்.

கட்டுரைகளுக்கு உசாத்துணைகள் குறிப்பிடப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் அரசியல் கலப்பற்றதாக இருப்பதுடன் தனிநபரையோ இனக் குழுக்களையோ குறைகூறுவனவாக அமைதல் ஆகாது.

ஆக்கங்கள் இலகுவானதும் ஏற்புடையதுமான மொழி நடையில் அமைதல் வேண்டும். ஆகவே எதிர்வரும் 31.05.2022 இற்கு முன்னர் தலைவர், கலாசார பேரவை, பிரதேச செயலகம், பூநகரி எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு பூநகரி பிரதேச செயலர் த.அகிலன் அறிவித்துள்ளார். (4



அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 82 ஆம் ஆண்டு விழா நிகழ்வுகள் கடந்த 14 ஆம் திகதி சனசமூக நிலையக் கலையரங்கில் இடம்பெற்றது.

## அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான நிலையான வைப்புத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு இன்று 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு [illegible] மத்திய கல்லூரி [illegible] மண்டபத்தில் நடைபெறும். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்க மருந்திற்கு தட்டுப்பாடு! சத்திர சிகிச்சைகள் நிறுத்தம்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

(கொழும்பு)

மயக்க மருந்துகளின் தட்டுப்பாடு காரணமாக அரசாங்க மருத்துவமனைகளில் அவசர சத்திர சிகிச்சைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் மற்றும் விபத்துக்கள் தொடர்பான சத்திர சிகிச்சைகள் மாத்திரம் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கத் தயார்

## உலக வங்கி தெரிவிப்பு

**(வோஷிங்டன்)**

**இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.**



வோஷிங்டனில் நிதியமைச்சர் அலி சப்ரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து உலக வங்கியின் துணைத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்கள் மீதான நெருக்கடியின் தாக்கம் குறித்து உலக வங்கி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

எனவே, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான பொருட்கள், ஊட்டச்சத்து மற்றும் கல்விக்கு அவசர உதவியை வழங்க தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி-6)

# இந்த அரசாங்கத்திற்காக பிரசாரம் செய்ததையிட்டு வெட்கப்படுகிறேன்

## பௌத்த தேரர் தெரிவிப்பு

(சென்னை)

மக்கள் இந்த ஆட்சியை விரும்பவில்லை என்றால் ஜனாதிபதியும், பிரதமரும் உடனடியாக தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டுமென பிரபல பௌத்த பிக்குவான கொட்டுவே பொடி ஹதுருவோ கோரிக்கை விடுத்துள்ளார்.

தாம் இந்தியாவிலிருந்து அவசரமாக முகநூலில் இந்த கோரிக்கையை முன்வைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தாம் இந்த அரசாங்கத்திற்காக பிரசாரம் செய்தமைக்காக வெட்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்களைக் கொலை செய்வதற்கு அரசாங்கத்திற்கு மக்கள் அதிகாரம் அளிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# முகக்கவசம் தேவையில்லை என்ற முடிவை ரத்து செய்க

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்ற முடிவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யுமாறு மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கொரோனா பாதிப்பு எண்ணிக்கை குறைந்து விட்டாலும், உலகின் பல்வேறு பகுதிகளில் புதிய பிறழ்வுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவை தொற்று நோய்களின் மற்றொரு அலையை ஏற்படுத்தும் என்றும் அச்சங்கத்தின் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ எச்சரித்தார்.

குறிப்பாக நாடு முழுவதும் மக்கள் தினசரி ஒன்றுகூடுகின்றனர் என்பதுடன், மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவப் பொருட்கள் பற்றாக்குறையாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

# மட்டக்களப்பில் இருந்து மூவர் தமிழகம் சென்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் உட்பட மூன்று பேர் நேற்றுக் காலை தனுஷ்கோடியை சென்றடைந்தனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை முழுவதும் உணவுப்பொருட்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், ஏற்கனவே, இலங்கையின் 10 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேர் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உணவு விசமடைந்ததால் 325 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

கொக்கலை ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் உணவு விசமடைந்தமையால் 325 பேர் காலி - கராபிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டவர்களில் 16 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் ஷெல்டன் பெரேரா குறிப்பிட்டார். (நி-6)

# 120,000 மெற்றிக் தொன் எரிபொருள் இலங்கைக்கு

(கொழும்பு)

இரண்டு கப்பல்கள் மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 120,000 மெற்றிக் தொன் எரிபொருளை இறக்கும் பணி ஆரம்பமாகி உள்ளது.

38 மில்லியன் டொலர்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் எரிபொருளை இறக்கும் பணிகள் தொடங்கியதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதில் விமான சேவைக்கு தேவையான எரிபொருள் மற்றும் டீசல் என்பன அடங்குவதாகவும் பருவ மழைக்கு முன் தேவையான நிலக்கரியும் கிடைத்துள்ளது என்றும் அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (நி-6)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 32 சூரி 10 செவ் 8 இல்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: BBA Audit
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12517

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.பா: 14 சூரி 11 செவ் 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: நகை வேலை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12519

பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம் : பூரம் 1
கி.பா: 2 ½ சூரி 9 செவ் 11
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும
தொ.இ: B/12524

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
உயரம்: 174 cm
தகைமைதொழில்: உள்நாடு அல்லது வெளிநாடு
தொ.இ: B/12525

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: சூரி 7 செவ் 10 உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc மருந்து இறக்குமதி கம்பனி (தனியார்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் கனடா, நோர்வே, அமெரிக்கா
தொ.இ:G/12576

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 42 ½ சூரி 12 செவ் 11 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Junior Executive officer At Bank
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12577

பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 45 சூரி 11 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: உயர்தரம் தையல் கடை சொந்தம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த அரச.தனியார் உத்தியோகம் வெளிநாடு ஆயின் லண்டன்
தொ.இ:G/12578

பிறப்பு: 1995 கிறிஸ்தவம் உயரம்: 4'11"
தகைமை/தொழில்: BSc,MSc,MBA
எதிர்பார்ப்பு: வைத்தியர்வெளிநாடு ஆயின்லண்டன்
தொ.இ:G/12579

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 25

# மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்...



8 வயதுள்ள சிறுமி தயங்கித் தயங்கி ஒரு மருந்துக் கடையை நெருங்கினாள்.
கடைக்காரர் வேறு ஒருவருடன் சுவாரஸ்யமாக பேசிக் கொண்டு இருந்தார்.
அங்கிள்... அங்கிள்.... என கூப்பிட என்னம்மா என கடைக்காரர் பரிவுடன் கேட்டார்.
அண்ணனுக்கு உடம்பு சரியில்லை.... மருந்து வேணும்.... திக்கி...திக்கிய படியே கண்களில் கண்ணீருடன் சொன்னாள்
விபரப்பட்டியல் கொண்டு வந்தாயா குழந்தை?
அந்த குழந்தை ஒன்றும் தெரியாமல் முழித்தது.... அப்படின்னா?
எங்கிட்ட காசு இருக்கு.... என்றபடியே தன் பைக்குள் கையை விட்டு அந்த மண் உண்டியலை எடுத்து மேசை மேல் வைத்தாள்.
"காசு பத்தலைன்னா நான் வீட்டுக்குப் போய் வேற காசும் கொண்டு வாறேன் அங்கிள், மருந்து குடுங்க அங்கிள். இந்த மருந்து குடுத்தா என்னோட அண்ணனுக்கு உடம்பு சரியாயிரும்.... ப்ளீஸ் அங்கிள்... குழந்தை அழுகைக்கு தயார் ஆனது.
சரி அழாதே.... மருந்து பேர் என்ன?
குழந்தை மென்று விழுங்கி சொன்னது
"மெரிக்கள்" கடைக்காரர்க்கு ஒன்றும் புரியவில்லை... மீண்டும் கேட்டார்.
நல்லா ஞாபகப்படுத்தி சொல்லுமா... என்ன மருந்து பேரு?
மெரிக்கள் அங்கிள்... அப்படி ஒரு மருந்தே இல்லையேம்மா... ஆமா உனக்கு யார் இந்த மருந்து பேரை சொன்னது?
குழந்தை கண்ணீருடன் சொன்னது....
டாக்டர் அம்மா அப்பா கிட்ட பேசிட்டு இருக்கும் போது நான் கேட்டேன். இந்த மருந்து இருந்தா தான் அண்ணன் பிழைக்க முடியுமாம் அங்கிள்... என சொல்லி அழ ஆரம்பித்தாள்.
அதுவரை நடப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்த அவரது நண்பர் அக் குழந்தையிடம் வந்து,
அழாதே செல்லம். உங்க அண்ணனுக்கு வேண்டிய மருந்தை நான் வாங்கித் தாரேன். முதலில் உங்க வீட்டுக்குப் போய் உங்க அண்ணனை பார்க்கலாம். அப்புறம் நானே மருந்து கொண்டு வருகிறேன்.... என்று அந்த சிறுமியின் கையைப் பிடித்து அவள் வீட்டுக்குக் கூட்டிச் சென்றார்.
வீட்டில் அவளது அண்ணனை பரிசோதித்த அவர்... அவர்களது பெற்றோர்களிடம் அனைத்து விவரங்களையும் கேட்டு தெரிந்து கொண்டு அந்த நோயாளி குழந்தையுடன் அதே மருத்துவமனைக்குச் சென்று, அக்குழந்தைக்கு சிகிச்சை செய்த டாக்டரிடம் விவரத்தை கேட்டு அறிந்தார். அக்குழந்தைக்கு இருதயத்தில் 5 இடங்களில் block இருப்பதாகவும், அறுவை சிகிச்சைக்கு 5 இலட்சம் மேல் செலவாகும் என்று டாக்டர் சொல்ல, அதற்கு அந்த நண்பர்.....
நானும் ஒரு டாக்டர் தான். இருதய சிகிச்சை நிபுணர். அமெரிக்காவில் ஒரு பிரபல மருத்துவமனையில் தலைமை மருத்துவராக வேலை செய்கிறேன். விடுப்பில் வந்துள்ளேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இந்தக் குழந்தையின் அறுவை சிகிச்சையை நான் உங்கள் உதவியுடன் செய்யலாமா? மருத்துவ செலவை முழுவதும் நானே ஏற்றுக்கொள்கிறேன் என்றார்.
அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. பெற்றவர்கள் கண்ணீர் மல்க ஆண்டவர் தான் உங்கள் ரூபத்தில் வந்து என் குழந்தையைக் காப்பாற்றினார். என்று கூற அதற்கு மருத்துவர் இதற்கு மூலகாரணமே உங்கள் பெண் குழந்தையின் தூய்மையான அன்பு தான் காரணம். டாக்டர் உங்களிடம் ஏதாவது MIRACLE நடந்தால் தான் உண்டு என்று சொன்னதை, குழந்தை அந்த miracle என்ற வார்த்தையை மருந்து தான் என்று நினைத்து என் நண்பனின் மருந்துக் கடைக்கு வந்தது தான் மூலகாரணம்.
எல்லாம் வல்ல இறைவனுக்கு தெரியும், யார் யாருக்கு, எந்தெந்த நேரத்தில், எதைக் கொடுக்க வேண்டும் என்று. அதை இப்பொழுது உங்கள் பெண் மூலமாக கொடுத்துள்ளார்.

## உக்ரைனுக்கு உதவிக்கரம் நீட்டும் ஜப்பான்

(கீவ்)
உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடர்ந்து நீடித்து வரும் இந்நிலையில் உக்ரைனுக்கு இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான சிறப்பு உடைகள், முகக்கவசங்கள் மற்றும் ட்ரோன்களை வழங்க ஜப்பான் அரசு தீர்மானித்து இருக்கிறது என தகவல் வெளியாகியுள்ளது.
தங்களது நாட்டை பாதுகாக்க உக்ரைனியர்களின் போராட்டம் தொடர்கிறது. இதன் காரணமாக ஜப்பான் இராணுவ அமைச்சகம், உக்ரைன் நாட்டுக்கு தன் அதிகபட்ச ஆதரவைத் தொடரும் என்று தெரிவித்துள்ளது. (நி-6)

## உண...
## ரஷ்ய...

(வோஷிங்டன்)
உக்ரைன் மீதான ரஷ்...
உணவுப் பாதுகாப்பின்...
கருவூல செயலர் ஜேன...

அத்துடன், உணவு உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு, விநியோக சங்கிலி சீர்குலைவு மற்றும் பண வீக்கத்துக்கும் இந்தப் போர் காரணமாக உள்ளதாக

## ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் மோடி

(டில்லி)
இந்திய பிரதமர் நரேந்திர மோடி மே மாதத்தின் முதல் வாரத்தில் ஜேர்மனி, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
பிரதமரின் இந்த விஜயத்தின்போது டென்மார்க்கில் நடைபெறும் இந்தியா-நார்டிக் உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.
இதனையடுத்து பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்லும்



மோடி பாதுகாப்பு, இருதரப்பு உறவுகள், உக்ரைன் விவகாரம் ஆகியவை குறித்து அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## நேட்டோவில் இணையப்போவதாக பின்லாந்து அறிவிப்பு



(பின்லாந்து)
இந்தியாவுக்கு வந்துள்ள பின்லாந்து பொருளாதார விவகார அமைச்சர் மிகா லிந்திலா, தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# வு நெருக்கடிகளுக்கு யாவே பொறுப்பு

## அமெரிக்கா தெரிவிப்பு

**ன ரஷ்யாவின் போர் உலகெங்கும் ஏற்கனவே உருவாகியுள்ள ப்பின்மையை மேலும் மோசமாக்கியுள்ளதாக அமெரிக்க ஜேனட் யெல்லன் தெரிவித்துள்ளார்.**

அவர் தெரிவித்தார்.

போருக்கு முன்பே 800 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் - அல்லது உலக மக்கள் தொகையில் 10% பேர் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ரஷ்யாவின் போர் காரணமாக உணவு விலைகள் அதிகரித்துள்ளதால் மேலும் சுமார் 10 மில்லியன் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கக்கூடும் என மதிப்பீடுகள் காட்டுகின்றன எனவும் ஜேனட் யெல்லன் குறிப்பிட்டார்.

இந்நிலையில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மற்றும் சிறு விவசாயிகளுக்கான ஆதரவை அதிகரிக்கும் அதேவேளையில், விலைகள் மேலும் அதிகரிக்க வாய்ப்பாக அமையும் ஏற்றுமதி தடைகளை நாடுகள் தவிர்க்க வேண்டும்.

மோசமாக உணவுப் பாதுகாப்பின்மை உள்ளிட்ட நெருக்கடிகளுக்கு ரஷ்யாவே பொறுப்பு.

ரஷ்யாவின் பொறுப்பற்ற போரின் விளைவுகளை தணிக்க உதவுவதற்கு அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் இணைந்து அவசர வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அமெரிக்க கருவூல செயலர் ஜேனட் யெல்லன் தெரிவித்தார். (நி-6)


# போரை நீடிக்க ஆயுதம் வழங்கும் அமெரிக்கா

## ரஷ்யா சாடல்

(மொஸ்கோ)

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வராமல் ஓராண்டுக்கு மேல் நீடிக்க விரும்புவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கய் ஷோய்கு குற்றம் சாட்டியுள்ளார்.

உக்ரைனில் கடைசி மனிதர் போரில் மடியும் வரை ஆயுதங்களை வழங்க பல மில்லியன் டொலர்கள் இறைக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.



உக்ரைனுக்கு பாதுகாப்பு நிதியாக 800 மில்லியன் டொலர் அளிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் அறிவித்தார்.

ஆயுதங்கள் வழங்குவதன் மூலம் போரை நீடிக்க மேற்கத்தேய நாடுகள் முயற்சிப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-6)

நாடு இந்த முறை நேட்டோவில் உறுப்பு நாடாக இணையப் போவதாக தெரிவித்துள்ளார். பின்லாந்தும் அதன் அண்டை நாடான சுவீடனும் நேட்டோ கூட்டமைப்பில் இணைந்தால் அதன் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று கடந்த வாரம் ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போரால் சில நாடுகள் அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்வது குறித்து ரஷ்யா எச்சரித்துள்ளது. ரஷ்யாவின் தாக்குதலை பின்லாந்து கடுமையாகக் கண்டிப்பதாக அந்நாட்டு அமைச்சர் மிகா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (நி-6)

# பாராளுமன்றில் மன்னிப்பு கோரிய பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன்



(லண்டன்)

கொரோனா கட்டுப்பாடுகளை மீறி விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்த விவகாரம் தொடர்பில் பிரித்தானிய பிரதமர் மன்னிப்பு கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய பிரதமர் போரிஸ் ஜோன்சன் முழு மனதுடன் மன்னிப்புக் கோருவதாக தெரிவித்துள்ளதுடன் விதிமுறைகளை மீறுவதாக அந்நேரத்தில் தாம் எண்ணவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பிரதமர் மன்னிப்பு கோரியமையானது நகைப்புக்குரியது எனவும் கட்டுப்பாட்டுகளை மீறியதால், அவர் பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொரோனா தடுப்பு விதிகளை மீறியதாக பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் மற்றும் நிதி அமைச்சர் ரிஷி சுனக் ஆகியோர் மீது அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வெப்பத்தால் வாடும் விலங்குகளுக்கு ஐஸ்கிறீம்



(மெக்சிக்கோசிட்டி)

மெக்சிக்கோவில் உயிரியல் பூங்காவில் வெப்பத்தால் வாடும் விலங்குகளுக்கு ஐஸ்கிறீம் வழங்கப்பட்டது. அங்கு சுமார் 38 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகும் நிலையில், விலங்குகள் உயர் வெப்பநிலையை சமாளிக்க ஏதுவாக பூங்கா பணியாளர்கள், ஒவ்வொரு விலங்களுக்கும் ஏற்றவாறு பிரத்தியேகமாக ஐஸ்கிறீம்களை தயார் செய்தனர்.

சிறுத்தைப்புலிகளுக்கு மாமிசத்தால் ஆன ஐஸ்கிறீம்களையும் கறுப்பு ஹவ்லர் குரங்குகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம்களையும் வழங்கினர்.

மேலும் விலங்குகளின் இருப்பிடங்களுக்கு அருகில் குழிகள் தோண்டப்பட்டு, அதில் நீரை நிரப்பி விலங்குகள் குளியலாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடல் போராட்டம்

# தமிழர்களுக்கு தீர்வு தராது

## அருட்தந்தை சக்திவேல் சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

**அரசிற்கு எதிராக நடைபெறும் போராட்டங்கள் தெற்கின் மக்களுக்கு பொருளாதாரம் சார்ந்தது. இன அழிப்பை சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கோ அது யுத்தக் குற்றம் சார்ந்தது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கோட்டா கோ ஹோம் தொனிப் பொருளில் காலிமுகத்திடலில் பத்து நாட்களை கடந்தும் போராட்டம் இரவு பகலாக தொடர்கின்றது. இப்போராட்டத்தில் சிங்க கொடியை அசைத்தும், போர்த்துக் கொண்டும் இன,மத சகோதரத்துவம் பேசும் பெரும்பான்மை சமூகத்தார், அதற்கு மத்தியில் அதே சிங்கக் கொடியை கையில் தாங்கிக்கொண்டு நிற்கும் தமிழர்களையும், முஸ்லிம்களையும் காணக்கூடியதாக உள்ளது.

இந்த சகோதரத்துவம் என்பது பெரும்பான்மை ஏனைய இனங்களை கரைத்துவிடும், அழித்துவிடும் தன்மை கொண்டது என்பதே உண்மை.

காலிமுகத்திடலில் கோட்டா கோ ஹோம் கிராமம் அமைக்கப்பட்டிருக்கும் அதே சூழ்நிலையில் ரணவிரு கம (இராணுவ வீரர்களின் கிராமம்) அமைக்கப் பட்டுள்ளது.

தேசியக்கொடியும் இராணுவ வீரர் கிராமமும் தமிழ் இன எதிர்ப்பு அடையாளமே. இவை இரண்டிற்கும் மத்தியில் தமிழர்கள் தேசியக் கொடியோடு நிற்பதன் மூலம் எதனை சாதிக்க விரும்புகிறனர்? எதனைக் கூற வருகின்றனர்? இன அழிப்பு வரலாறு தெரியாத இளம் தலைமுறையினர் இன ஒற்றுமை குறித்து பேச தலைப்பட்டுள்ளனர்.

இவர்களே அங்கு தமிழில் தேசிய கீதம் பாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்கு முரண்பட்டும் உள்ளார். இதுவே காலிமுகத்திடலின் உண்மை முகம். காலிமுகத்திடலில் கொட்டகை அடித்து தொடர்ச்சியாக போராட்டத்திற்கு உந்து சக்தியாக இருக்கும் ஒரு சில பௌத்த பிக்குகளையும் பெரும்பான்மையின பல்கலைக்கழக மாணவர்களையும் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன்.

அவர்களிடம் வடக்கு கிழக்கு மக்கள் தங்கள் எதிர்ப்பு பதாகை மற்றும் கோஷங்களுடன் கலந்து கொள்ள முடியுமா? என நான் கேட்டபோது ஏனைய குழுக்களோடும் கலந்துரையாடிவிட்டு கூறுகின்றோம் என்றனர். இது வரைக்கும் எந்தப் பதிலும் கொடுக்கவில்லை.

இது காலிமுகத்திடலில் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு, நீதிக்கான கோரிக்கைகளுக்கு இடமில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

சமகாலத்தில் தெற்கின் போராட்டங்களுக்கு சமமாக எமது போராட்டமும் தொடர்தல் வேண்டும். இது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வலுப்படுத்தும் எனத் தெரிவித்தார். (4-6-299)

# மீண்டும் இரசாயன உரம்

## மகிழ்ச்சியில் விவசாயிகள்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சிறுபோக விவசாயத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில் உர இறக்குமதிக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

ஜனாதிபதிக்கு எவ்வாறு ஞானம் பிறந்தது என்று தெரியவில்லை ஆனால் பொருத்தமான நேரத்தில் அனுமதி வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்க விடயம் என கிளிநொச்சி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று சென்ற போக விவசாயத்தின் போது ஏற்பட்ட நட்டத்தை கருத்திற்கொண்டு இழப்பீடுகள் வழங்குவதாகவும் கூறியிருந்தார்.

அந்த இழப்பீடுகள் வேகமாக வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். (4-6-315)


# பகிரங்க ஏலவிற்பனை 2022
# பருத்தித்துறை பிரதேசசபை-புலோலி

பருத்தித்துறை பிரதேசசபை ஆணைவிழுந்தான் வாகனதரிப்பிடத்திலும், குடத்தனை உப அலுவலகத்திலும், செம்பியன்பற்று உப அலுவலகத்திலும், பழையகட்டுமான பொருட்கள், அலுவலக தளபாடங்கள் ,உபகரணங்கள், சல்லிக்கற்கள் பகிரங்க ஏலத்தில் பின்வரும் திகதி விபரப்படி விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மேற் குறித்த அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் நாள் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை பொருட்களை பார்வையிடலாம். ஏலவிற்பனைப் பொருட்களை பெறுகின்றவர்கள் உடனடியாக முற்பணத்தினைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

ஏல விற்பனை திகதி: 27.04.2022
புதன்கிழமை மு.ப 9.30 மணி
இடம்: ஆனைவிழுந்தான் வாகனத்தரிப்பிடம்
பருத்தித்துறை பிரதேச சபை

| தொ. இல | விபரம் | எண் |
|---|---|---|
| 1 | Conference Table | 1 |
| 2 | Steel Table | 2 |
| 3 | Vehicle tyre | 12 |
| 4 | Battery | 3 |
| 5 | வாகன உதிரிப்பாகங்கள் | |
| 6 | பிக்கப் ரயர் | 4 |
| 7 | தார் | 3196.4 L |
| 8 | குப்பைவாரி | 3 |
| 9 | வெற்றுத்தார் பரல்கள் | |

ஏல விற்பனை திகதி: 27.04.2022
புதன்கிழமை பி.ப 2.00 மணி
இடம்: செம்பியன்பற்று உபஅலுவலகம்
பருத்தித்துறை பிரதேச சபை

| தொ. இல | விபரம் | எண் |
|---|---|---|
| 1 | சல்லிக்கற்கள் & கட்டட இடிபாடுகள் | |
| 2 | File Cabinet steel | 2 |
| 3 | Steel Table | 1 |
| 4 | Office Chair | 1 |
| 5 | Plastic Chair | 1 |
| 6 | வெற்றுத்தார் பரல்கள் | |

ஏல விற்பனை திகதி: 27.04.2022
புதன்கிழமை மு.ப 12.00 மணி
இடம்: குடத்தனை உபஅலுவலகம்
பருத்தித்துறை பிரதேச சபை

| தொ. இல | விபரம் | எண் |
|---|---|---|
| 1 | வெற்றுத்தார் பரல்கள் | |
| 2 | இரும்புக்கேடர்கள் & பழைய இரும்புகள் | |

**தவிசாளர்.**
**பருத்தித்துறை பிரதேச சபை**
**புலோலி**
**21.04.2022**

(C-4204)



## கரவெட்டி கால்நடை வளப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## அங்கத்தவர் பட்டியல் காட்சிப்படுத்தல் தொடர்பாக

எமது சங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான அங்கத்தவர் பெயர்பட்டியல் எமது சங்கத்தின் கிளைகளில் 21.04.2022 தொடக்கம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எமது சங்க அங்கத்தவர் பட்டியலை சரிபார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பொது முகாமையாளர்.** (C-4202)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 300 | 320 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 450 | 400 | 300 |
| தக்காளி | 120 | 120 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 120 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 180 | 220 | 200 | 200 |
| பூசணி | 60 | 70 | 80 | 80 |
| புடோல் | 250 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 350 | 340 | 100-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 210 | 220 | 240 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 120 | 160 |
| லீக்ஸ் | 200 | 180 | 150 | 200 |
| பீற்றூட் | 160 | 170 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 200 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 800 | 1000 |
| போஞ்சி | 300 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 140 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 260 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்

# செல்வ நிலை உயரும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: சு, சே, சோ, ல, லி, லு, லே, லோ, அ உள்ளவர்களுக்கும்

**மேஷ இராசி வாசகர்களே!**

இந்த தமிழ் புத்தாண்டு, பொருளாதாரத்தில் நல்ல வளர்ச்சியை உங்களுக்குத்தரப்போகின்றது. எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவேறும். குடும்ப ஒற்றுமை ஏற்படும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். மதிநுட்பத்தோடு செயற்பட்டு மக்களின் செல்வாக்கைப் பெறப்போகிறீர்கள்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தனாதிபதி சுக்கிரனோடு இணைந்து லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்ப ஸ்தானாதிபதியும், களத்திர ஸ்தானாதிபதியுமான சுக்கிரனோடு உங்கள் இராசிநாதன் இணைந்திருப்பதால், குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும்.

ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிக இலாபம் தரக்கூடிய விதத்தில் தொழிலும் அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும். வருமானப் பற்றாக்குறை அகலும். உத்தியோகத்தில் சம்பள உயர்வும் நல்ல பொறுப்புகளும் கிடைக்கலாம்.

உங்கள் இராசியிலேயே சூரியன், புதனோடு இணைந்து 'புத ஆதித்ய யோக'த்தை உருவாக்குகிறார். பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியன் உச்சம் பெற்று, அவரோடு சகாய ஸ்தானாதிபதி புதன் இணைந்திருப்பதால் பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

ஜென்மத்தில் ராகுவும், 7 இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப தோஷ ஆதிக்கம் இருக்கிறது. எனவே அதற்குரிய பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. ஒருசில சமயங்களில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை உருவாகும். பொருளாதார மேம்பாடு கருதி புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது, பங்குதாரர்களின் சாதகம் பக்கபலமாக இருக்கின்றதா? என்பதை ஆராய்ந்து பார்த்து அதற்கு ஏற்ப தொழில்களை அமைத்துக் கொள்வது நல்லது.

தொழில் ஸ்தானத்தில் சனிபலம் பெற்றிருப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். என்றாலும் அதன் வக்கிர காலத்தில் கொஞ்சம் கவனமுடன் செயற்பட வேண்டும்.

கூட்டாளிகளால் பிரச்சினை ஏற்படலாம். குருவைப் பொறுத்தவரை வருடத் தொடக்கத்திலிருந்து விரய ஸ்தானத்தில் இருக்கின்றார்.

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. விரயாதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இந்த ஆண்டு விரயங்கள்




கூடும். எனவே சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக இல்லத்தில் சுப காரியங்களை நடத்துவது, வீட்டிற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவது போன்ற சுப விரயங்களை மேற்கொள்ளலாம்.

**குருவின் பார்வை பலன்**

மீனத்தில் சஞ்சரிக்கும் குரு, இந்த ஆண்டு முழுவதும் உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். வாகனம், வீடு, தாய், சௌகர்யம், எதிர்ப்பு, வியாதி, கடன், இழப்பு, விரயம் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானங்களைக் குரு பார்த்தால் வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் பணி நிரந்தரம் பற்றிய தகவல் உண்டு. மாற்றுமருத்துவத்தால் உடல் ஆரோக்கியம் சீராகும். கடன் சுமை ஓரளவு குறையும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு இழந்த பதவிகள் கூட மீண்டும் கிடைக்கும்.

8.8.2022 முதல் 16.11.2022 வரை, மீன இராசியில் குரு வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். பெற்றோர் வழியில் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். உற்றார், உறவினர்களால் விரயங்கள் ஏற்படும். வீடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் வந்து சேரும். புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

நிதானமும், பொறுமையும் தேவைப்படும் நேரம் இது. பிடிவாதக் குணத்தையும், கோபத்தையும் குறைத்துக் கொள்ளுங்கள். முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். பணியிட மாற்றத்திலும் திருப்தி ஏற்படாது.

**சனியின் வக்கிரமும் பெயர்ச்சி காலமும்**

25.5.2022 முதல் 9.10.2022 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். 29.3.2023 இல் கும்ப இராசிக்கு சனி, பெயர்ச்சியாகிச் செல்கின்றார்.

சனியின் வக்கிர காலத்தில் தொழிலில் கவனம் தேவை. பிறருக்கு பொறுப்பு சொல்வதால் பிரச்சினைகள் உருவாகலாம். பொதுவாக சனிப் பெயர்ச்சிக்குப் பின்னால் லாப ஸ்தானம் பலம் பெறுகிறது.

எனவே தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

கூட்டுத் தொழிலில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த சம்பள உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

விரய ஸ்தானத்தில் குரு இருப்பதால் குரு கவசம் பாடி குருவை வழிபடுவதோடு வியாழன் தோறும் விரதமிருப்பது நல்லது. குரு வழிபாடு குதூகலம் வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

புத்தாண்டில் கொடுக்கல் - வாங்கல்களில் திருப்தி ஏற்படும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

பிள்ளைகளின் கல்வி, கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பிடிவாதக் குணத்தைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வது நல்லது.

சர்ப்ப தோஷம் இருப்பதால் ராகு-கேது பரிகாரத்தை முறையாக யோக பலம் பெற்ற நாளில் அனுகூல ஸ்தலங்களில் செய்து கொள்ளுங்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அம்புலிமாமா

# எதிர் நீச்சல்

(நேற்றைய தொடர்ச்சி)

பெண் பார்க்கும் நிகழ்ச்சி எல்லாம் முடிந்த பின் சாவகாசமாகப் பேசலாம் என்றான். சந்திரனும் அவனது வேண்டுகோளை ஏற்று மறுநாள் விசேஷத்தில் கலந்து கொண்டான்.

அன்று ஊரார் எல்லோரும் வந்து முகுந்தனுக்கு உதவினார்கள். அவர்களை எல்லாம் முகுந்தன் தக்கபடி கௌரவித்தான். மாப்பிள்ளை வீட்டாருக்கும். பெண் பிடித்துப் போகவே கல்யாணம் நிச்சயம் செய்யப்பட்டது. அப்போது முகுந்தனின் தாயார் அவனிடம் "நீ எல்லாம் செய்வதாக மாப்பிள்ளை வீட்டாரிடம் சொல்லி விட்டாயே எப்படிச் செய்யப் போகிறாயோ!" எனக் கேட்டாள். முகுந்தனும் சற்றும் கவலைப்படாமல் "உலகில் யாருக்குத்தான் கஷ்டம் இல்லை? நான் எப்படியாவது என் மகளின் திருமணத்தை நடத்தி விடுகிறேன். கவலைப்படாதே" என்றான்.



அதன் பின் சந்திரன் முகுந்தனைத் தனியே அழைத்துப் போய் "இப்போது நான் கேட்ட விளக்கத்தைத் தருவீர்களா?" என்று கேட்டான், முகுந்தனும் "ஊரார் என்னைத் தூற்றுவது எனக்கு மிக நன்றாகத் தெரியும். என்னிடம் பணம் இல்லை. நான் மற்றவர்களை நம்பி வாழ வேண்டியுள்ளது. அதனால் அவர்கள் என்னை என்ன சொன்னாலும் அதுபற்றி நான் கவலைப்படுவதே இல்லை. நான் யாரிடமும் வம்புக்குப் போக மாட்டேன். எனக்கு ஏதாவது தேவைப்பட்டாலே ஒருவரை அணுகுவேன். யாருக்கும் எந்தக் கெடுதல் செய்யாமலும் யாரைப் பற்றியும் எதுவும் குறை கூறாமலும் இருப்பதால் என்னை எல்லோரும் விரும்புகிறார்கள்" என்றான். சந்திரன் அப்போது "என் குருநாதர் ஆத்மானந்தர் சொல்லித் தான் உங்களிடம் நீச்சல் பற்றி அறிய வந்தேன். நான் நீச்சல் வீரன் பட்டம் பெற விரும்புகிறேன்" என்றான். முகுந்தனும் "எனக்கு ஆத்மானந்தரையும் தெரியாது, நீச்சலும் தெரியாது. சிறு வயது முதல் குடும்பத்திற்காகக் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் எதிர் நீச்சல்தான் போட்டு வருகிறேன். இதுதான் கடலில் இறங்காமல் நான் போடும் நீச்சல்" என்றான்.

சந்திரனுக்கு அப்போதுதான் தன் குருநாதர் எப்படிப்பட்ட நீச்சலைக் கற்றுக் கொள்ளச் சொன்னார் என்பது தெரிந்தது. அவன் முகுந்தனிடம் விடை பெற்றுக் கொண்டு தன் ஊருக்கு வந்தான். அவன் மாலதியை மணம் புரிந்து கொண்டு பிரச்சினைகளைச் சமாளித்து வெற்றி நடை போட்டு அவளோடு சுகமாக வாழ்ந்து வரலானான். (முற்றும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்



78

"உருவிலே மன்மதனை ஒப்பர்; தோள் வலிமையில் மேரு மலையை நிகர்ப்பர்; முனிவர் வாழ்வில் அவர்கள் அக்கறை கொண்டவர்; வில்லாற்றலும் வீரமும் உடைய அவர்கள் உன்னைத் துரசாக மதிக்கின்றனர்; அரக்கரை வேரோடு அழிக்க உறுதி பூண்டுள்ளனர்; அவர்கள் தசரதன் புதல்வர்; இராமன், இலக்குவன் என்பன அவர்கள் பெயர்கள்" என்றாள்.

"அங்கிருந்த நம் இனத்தவர் அவர்களை எப்படி விட்டு வைத்தனர்?" என்று கேட்டான்.

"கரனும் தூஷணனும் என் குறையைக் கேட்டனர். பின் அவர்களை எதிர்த்து மாண்டு விட்டனர்" என்றாள்; "நீ செய்த தவறு என்ன? மூக்கும் செவியும் அறுக்க நீ செய்த பிழை யாது?" என்று கேட்டான்.

"பெண்ணால் வந்த பெரும் பிழை" என்றாள்.

"யார் அவள்?"

"கொடி போன்ற மென்மை உடைய அப்பேரழகியின் பாதம் தீண்ட இந்தப் பார் பாக்கியம் செய்தது; அவள் பேர் சீதை" என்று கூறி அவள் வடிவினை எல்லாம் பாராட்டத் தொடங்கினாள்.

"அவள் சொற்கள் காமரம் என்னும் பண்ணிலே இசைக்கும் பாடலாகும்; திருமகளும் அவளுக்குப் பணிப் பெண் ஆகும் தகுதியைப் பெற மாட்டாள்; அவள் கூந்தல் மேகத்தைப் போன்றது; பாதங்கள் செம்பஞ்சு போன்றவை; விரல்கள் பவளத்தைப் போன்றவை; வதனம் தாமரை மலரைப் போன்றது; கண்கள் கடலைப் போன்றன; "ஈசனார் கண்ணால் அநங்கன் எரிந்து அழிந்தான்" என்பது பொய்யுரை, வாசம் நாறும் கூந்தலாளைக் கண்டு அவளை அடைய முடியாமல் அவன் வெந்து தேய்ந்தான் என்பதுதான் உண்மை".

"வேலினையும் வாளினையும் வெற்றி கொண்ட கண்ணை உடைய அழகியை ஓவியத்திலும் எழுத முடியாது; இவளைப் போன்ற பேரழகியைத் தேவர் உலகத்திலும் காண முடியாது; நாகர் உலகத்திலும் காண முடியாது; இந்த மண்ணுலகத்திலும் பார்க்க முடியாது. இம் மூவுலகத்திலும் காண முடியாத பேரழகி அவள்". "அவள் தோள் அழகை எடுத்துச் சொல்லுவேனோ? அவள் முகத்தில் உலவுகின்ற கண் அழகைச் சொல்லுவேனோ! மற்றைய அங்கங்களின் அழகை வர்ணிப்பேனோ! அவள் அழகைத் தனித்தனியே சொல்லும் ஆற்றல் எனக்கு இல்லை; நாளையே நீ பார்க்கப் போகிறாய்; அதனால் யான் எடுத்துச் சொல்லத் தேவை இல்லை".

"வில்லைப் போன்றது நெற்றி என்றாலும், வேல் போன்றது விழி என்றாலும், முத்துப் போன்றது பல் என்றாலும் சொல்ல அழகாக இருக்குமேயன்றி உண்மையை உரைத்தது ஆகாது. புல்லைப் போன்றது நெல் என்று கூறினால் எப்படி இருக்குமோ அதனைப் போன்றதுதான் இவ் உவமைகள்."

"இந்திரன், இந்திராணியைப் பெற்றான். ஈசன் உமையைப் பெற்றான். தாமரைச் செங்கணான் செந்திருவைப் பெற்றான்; சீதையை நீ பெற்றால் நீ தான் அவர்களைவிட மேன்மை பெற்றவன் ஆவாய்"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி செய்ய உரிமை இல்லையென்றால் உனக்கு அமைந்துள்ள அறிவின் பயன்தான் என்ன? – இங்கர்சால்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி கோட்டா பதவி விலகுவாரா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்வாரா? ஏன் அவர் இன்னமும் பதவி விலகாமல் இருக்கிறார் என்ற கேள்விகள் தற்போது பொதுமக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளன.

இந்தக் கேள்விக்கான விடை என்ன என்பது நமக்குத் தெரியாதாயினும் ஜனாதிபதிப் பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகிப் போவாராயின், அவருக்கான சங்கடங்களும் ஆபத்துக்களும் கணிசமாகக் குறையும் என்பதுதான் நம் கருத்து.

இதை நாம் கூறும்போது அப்படியானால், எதற்காக இன்னமும் ஜனாதிபதிப் பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகவில்லை என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், அதைத்தான் ஊழ்வினைப் பயன் என்பர்.

ஆம், கொண்டிடப் பாவம் தின்றிடத் தீரும் என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

இதன் பொருள் நாம் மற்றவர்களுக்குச் செய்த பாவங்களை நாம் அனுபவித்தாக வேண்டும்.

அதாவது அந்தப் பாவத்தை தின்று தீர்த்த பின்பே அதிலிருந்து நாம் விடுபட முடியும்

ஆக, ஜனாதிபதி என்ற அதியுயர் பதவியில் இருக்கக்கூடிய கோட்டாபய ராஜபக்ஷ ஒரு சாதராண ஏழையின் மனநிலையில் கூட தற்போது இல்லை என்பதுதான் உண்மை.

தவிர, அவருக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்று திரண்டு பெரும் ஆர்ப்பாட்டம் செய்து அவரது இல்லத்தைச் சூழ்ந்து அவரை வெளியேறாமல் தடுத்து நிற்கின்றதான நிலைமை நடந்தாக வேண்டும் என்பது விதியாக இருந்தால்,

அந்த விதி அமுலாக முன்பாக எங்ஙனம் ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலக மனம் வரும்.

எனவே பதவியில் இருந்து விலகினால் மட்டுமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தப்பித்துக் கொள்ள முடியும் என்ற யதார்த்தம் பலருக்குத் தெரிந்திருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளாத வகையில் அறிவு வேறோர் சிந்தனையில் ஊறிக் கிடக்கும்.

இதுவே இயற்கை தனது நாடகத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தயாராகின்ற நடைமுறை.

ஆகையால் ஜனாதிபதிப் பதவியில் இருந்து உடனடியாக விலகுதல் என்ற தீர்மானத்தை கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் எடுக்கமாட்டார். அவ்வாறு எடுத்தாலும் அவருக்கு அருகில் உள்ள விசுவாசிகள் அதனைத் தடுத்து நிறுத்துவர்.

எனவே கந்தறுந்து காவடி எடுக்கின்ற பலன் நடந்தாக வேண்டும் என்பது எழுத்தாக இருந்தால், அதனைத் தடுக்க வல்லார் எவரும் இல்லை. இது ஒருபுறமிருக்க, எங்களுக்கு நடந்தது இப்போது தெற்கில் நடக்கிறது என்று பலரும் கூறுகின்றனர்.

அவ்வாறு அவர்கள் கூறுவது நியாயமாயினும் எங்களுக்கு நடந்தது அவர்களுக்கு நடப்பதாக இருந்தால் இப்போதைக்கு இந்தப் பிரச்சினை முடிவுக்கு வராது என்று கூறுவதே பொருத்துடையதாகும்.

ஏனெனில் எங்களுக்கு நடந்ததை தென்பகுதி அனுபவிக்க இன்னும் பல பிறவியினை அவர்கள் எடுக்க வேண்டி இருக்கும்.

## எரிபொருள் விநியோகத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்கு

### படையினர், இராணுவம் களமிறக்கம்

எரிபொருள் விநியோகத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக விமானப் படையினர் மற்றும் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தேவை ஏற்படின் எரிபொருள் புகையிரதங்களுக்கு இலங்கை விமானப்படை பாதுகாப்பு வழங்கும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் எரிபொருள் பவுஸர்களுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்குவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தியும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிபொருள் பவுஸர்கள் முற்றுகையிடப்படும் ஆபத்து இருப்பதை சுட்டிக்காட்டியே இவ்வாறு விமானப் படையினர் மற்றும் இராணுவத்தினரது பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 65 சதவீதத்தால் கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் இன்று முதல் 65 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை கொள்கலன் ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் மற்றும் உதிரிப் பாகங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்தார்.

முன்னதாக மார்ச் 13 ஆம் திகதி, அகில இலங்கை கொள்கலன் ஊர்திகள் உரிமையாளர்கள் சங்கம் கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை 60% அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாட்டில் இன்றும் சுழற்சி முறையில் மின்வெட்டு

(கொழும்பு)

நாட்டில் இன்றும் 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

இதற்காக மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

இதன்படி, A முதல் W வரையான வலயங்களில் இன்றும் நாளையும் முற்பகல் 9 மணி முதல் மாலை 5 மணிவரையான காலப்பகுதியில் சுழற்சி முறையில் 2 மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

அவ்வலயங்களில் அத்துடன் மாலை 5 மணிமுதல் இரவு 9 மணி வரையான காலப் பகுதியினுள் ஒரு மணி நேரமும் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## கொக்குவிலில் கோழிகள் திருட்டு

கொக்குவில் கிழக்குப் பகுதியில் பட்டப்பகல் வேளையில் வீட்டில் வளர்க்கப்பட்டுவந்த பல கோழிகள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் தொழில்களின் நிமிர்த்தம் வெளியே சென்ற சமயத்தில் வீட்டில் வயோதிபப் பெண்ணொருவர் மாத்திரம் தனித்திருந்த வேளையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7,18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 22 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவபுரம், பாலாவி, பொன்னாவொளி, வலைப்பாடு, வேராவில் ஆகிய பிரதேசங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மேலும் 61 பேருக்கு கோவிட்

(கொழும்பு)


கொரோனா தொற்று உறுதியான மேலும் 61 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 663,006 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 3,888 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7)

## சத்திய தரிசனம்

### பகவானிடம் சரணாகதி



**சுவாமியுடனான எனது அனுபவங்கள்**

இவற்றையெல்லாம் தவிர இந்த உலகத்தில் வேறு என்ன தேவை. எனது அன்பான சாயி சகோதர சகோதரிகளே அனுபவத்தை நீங்களும் அனுபவியுங்கள். எல்லோர் இதயத்திலும் பகவான் இருக்கிறார் என்பது மட்டும் அல்ல எல்லோரும் கடவுள் தான் என்று சுவாமி கூறுகின்ற வார்த்தை எனது அனுபவத்தின் மூலம் உண்மை என்று உணர்கிறேன். இதை மனிதர்கள் உணராது இருக்கின்றார்கள் என்று சுவாமி தனது அருள் உரைகளில் குறிப்பிடுகிறார். சுவாமி எனக்கு கூறப்பட்ட இந்த வார்த்தையை நினைத்துக் கொண்டு இருக்கிறேன். இதன் பின்பு ஒரு நாள் சுவாமியின் இணையத்தளத்தை பார்வையிட்ட போது அதில் ஒரு வாசகம் கூறப்பட்டு இருந்தது. சுவாமி பல பக்தர்களுக்கு கூறியிருக்கும் வார்த்தை **"எனது இருப்பிடம் பிரசாந்தி நிலையம் அல்ல உங்களது இதயமே எனது வீடு"** என்று குறிப்பிட்டுள்ளார். இப்படியாக சுவாமி கூறுகின்ற அனைத்தும் நமது வாழ்வை முன்னேற்றுவது மட்டுமல்ல வீடு பேற்றினை அடையச் செய்வது என்ற கருத்தை காட்டுகின்றது.

மேலும் 2006 ஆம் ஆண்டில் சுவாமியை அதிகமாக நேசித்தேன். அதாவது எனது சிந்தனை் முழுவதையும் சுவாமியின் மீது செலுத்தியிருந்தேன். பின்பு 22.08.2007 அன்று எனக்கு பைத்தியம் ஏற்பட்டது. இந்தப் பைத்தியம் பிடித்ததனால் எனது உடம்பையும் எனது மனநிலையையும் அதிகமாக பாதித்தது. அதாவது இந்த நோய் தாக்கத்தினால் நான்பட்ட துன்பங்கள் வார்த்தைகளால் எழுத முடியாது தடுமாறுகின்றேன். மூன்று தடவைகள் விசம் அருந்தி தற்கொலை செய்ய முயற்சி மேற்கொண்டேன். பின்பு வைத்தியசாலையில் அவசரப்பிரிவில் 2 வாரங்கள் சிகிச்சை பெற்று வந்தேன். இந்தக்காலப்பகுதியில் எனக்கு சுய நினைவற்று இருந்தேன். பின்பு நமது சுவாமி என்னை மரணத்தின் பிடியில் இருந்து தூக்கி எறிந்து விட்டார். பின்பு உயிர் பிழைத்தே. ஆனால் நோய் எனக்கு சுகமடையவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 47

**முஸ்லிம்களின் மற்றும் தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் எல்லை நிர்ணயம் செய்ய பல பிரேரணைகள் பரிந்துரைத்திருந்தன. முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 73% மற்றும் 25% ஆக உள்ளடங்கி இருந்ததை குழு அவதானித்தது.**

சில பொதுவான பிரேரணைகள் பரிந்துரைத்ததாவது தேர்தல் தொகுதிகள் உருவாக்கும் போது அது மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்காக ஒரு வாய்ப்பை உருவாக்கவேண்டும் என்பதேயாகும்.

தேர்தல் தொகுதிகள் புவியியல் மற்றும் வர்த்தக தொடர்புகள் அடிப்படையிலும் மற்றும் பிரதேச செய லகங்கள், சனத்தொகை மற்றும் பிரதேச ரீதியாகவே பிரிக்கப்படவேண்டுமேயன்றி ஜாதி மதம் போன்றவற்றை கொண்டு அல்ல என்பதேயாகும்.

அத்தோடு மூன்று சமூகங்களும் ஒன்றாக வாழ்கின்றன என்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதையும் ஆகும்.

தேர்தல் தொகுதிகளை பிரிக்கும்போது குழு இந்தக் கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டது.

**சில பொதுவான பிரேரணைகள் பரிந்துரைத்ததாவது தேர்தல் தொகுதிகள் உருவாக்கும் போது அது மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்காக ஒரு வாய்ப்பை உருவாக்கவேண்டும் என்றும். மூன்று சமூங்களும் ஒன்றாக வாழ்கின்றன என்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டிருந்தன.**

இரண்டு சமர்ப்பிப்புகளுக்கு குழுவால் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனென்றால் அதில் ஒன்று எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை மற்றது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாக அமையவில்லை.

பல பரிந்துரைகள் தேர்தல் தொகுதிகளுக்கான பெயர்களை குறிப்பிட்டிருந்தன. சில பரிந்துரைகள் பிரதேச செயலக பெயர்களையும், சில பரிந்துரைகள் நகர பெயர்களையும் ஏனையவை மாவட்ட பெயர்களையும் குறிப்பிட்டிருந்தன.

எனினும் தொகுதிகளுக்கு பெயரிடும்போது, அத்தொகுதி யிலுள்ள ஒரு பிரதேசசெயலகத்தின் பெயரை கிராமஉத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது.

சுருக்கமாகக்கூறினால் 11 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 3 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் தொகுதிக்கான சராசரி மக்கள் தொகையை விட −6.2% மற்றும் + 9.8% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப்பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து மட்டக்களப்பு மாவட்டம் 6 ஒற்றை அங்கத்துவதொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அவை கோறளைப்பற்றுவடக்கு(40), கோறளைப்பற்று தெற்கு (49), மண்முனைவடக்கு(48), மண்முனைபற்று (54), மண்முனைமேற்கு(76), போரதீவுப்பற்று(79) என்னும் தேர்தல் தொகுதிகளாகும். அடைப்புக்குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விவரம் அட்டவணை (N2) இல் காட்டப்பட்டுள்ளது.

**சுருக்கமாகக்கூறினால் 11 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 3 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநித்துவத்தை பாதுகாத்து மட்டக்களப்பு மாவட்டம் 6 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.**

### அம்பாறை மாவட்டம்பற்றிய தகவல்கள்

வட அகலாங்கு 6°30' - 7°44' கிழக்கு நெட்டாங்கு 81°58' - 81°52' இடையில், 4,415 சதுர கிலோமீற்றர் விஸ்தீரனம் கொண்டதாக கிழக்கு மாகாணத்தின் நிலப்பரப்பில் 44.2 சதவீதமான நிலப்பகுதி அம்பாறை மாவட்டத்திற்கு உட்பட்டதாகும். 4,222 சதுர கிலோமீற்றர் தரைப் பிரதேசத்தையும் மற்றும் 193 சதுர கிலோமீற்றர் நீர் உள்ளடக்கப் பிரதேசத்தையும் கொண்ட அம்பாறை மாவட்டம், மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் நீர் உள்ளடக்கப்பகுதி 4.4 வீதமானதாகும்.

இம்மாவட்டத்திற்கு வடக்கே மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை மாவட்டங்களும் தெற்கே அம்பாந்தோட்டை மாவட்டமும் மற்றும் கிழக்கே கடலையும் மேற்கே் மொனராகலை,பதுளை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.


மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியிலிருந்து பிரித்து 1961 ஆம் ஆண்டில் அம்பாறை தனியான ஒரு மாவட்டமாக நிறுவப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் வனப்பகுதி 1,511 சதுர கிலோ மீற்றராகக் காணப்பட்டதோடு அது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 34.2 சதவீதமாகும்.

இந்த மாவட்டத்தின் நில அமைப்பில் அதிகூடிய உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 390+ மீற்றர் ஆகும்.

அட்டவணை (N2) -
மட்டக்களப்புமாவட்டதேர்தல்தொகுதிகளும்சனத்தொகையும்

| தேர்தல்தொகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கோறளைப்பற்று வடக்கு | 634 | 36549 | 47807 | 140 | 85130 |
| கோறளைப்பற்று தெற்கு | 845 | 79548 | 10253 | 133 | 90779 |
| மண்முனை வடக்கு | 1463 | 77693 | 4573 | 2498 | 86227 |
| மண்முனை மேற்கு | 3031 | 69704 | 23532 | 85 | 96352 |
| மண்முனை பற்று | 210 | 34380 | 47675 | 36 | 82301 |
| போரதீவுப்பற்று | 614 | 85134 | 14 | 16 | 85778 |
| மொத்தம் | 6797 | 383008 | 133854 | 2908 | 526567 |

மட்டக்களப்பு மாவட்டம் பிரதேச செயலகங்கள்




**மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியிலிருந்து பிரித்து 1961 ஆம் ஆண்டில் அம்பாறை தனியான ஒரு மாவட்டமாக நிறுவப்பட்டது. 4,415 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரனம் கொண்டதாக கிழக்கு மாகாணத்தின் நிலப்பரப்பில் 44.2 சதவீதமான நிலப் பகுதி அம்பாறை மாவட்டத்திற்கு உட்பட்டதாகும். 2010 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் வனப்பகுதி 1,511 சதுர கிலோ மீற்றராகக் காணப்பட்டதோடு அது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 34.2 சத வீதமாகும்.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதுமான...

எது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா, கடனுக்கான தெரிவுகள் மற்றும் கொள்கைத் திட்டங்களை நேற்று முன்தினம் இலங்கை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைத் தூதரகத்தின் தலைவர் மசாஹிரோ நோசாகி தெரிவித்தார். (ம-7)

## செயலணி...

நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர் அந்தப் பதவியில் இருந்து விலகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கனை பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் உள்ளிட்ட மேலும் சில விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தான் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அலீஸ் நிஸாருத்தீன் தெரிவித்தார். (ம-7)

## மனித உரிமைகள்...

அவசியம் குறித்து இதன்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருடன் கலந்துரையாடப்பட்டதாக ஜூலி ஜியோன் சுங் தெரிவித்துள்ளார்.

அமைதியான போராட்டக்காரர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பணியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளதாக ஜூலி ஜியோன் சுங் குறிப்பிட்டார். (ம-7)
















## இது ராஜபக்ச...

இந்த வாதவிவாதம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துரைத்த அனுர பிரியதர்சன யாப்பா, நாட்டின் பிரச்சினையை தீர்க்க புதிய அமைச்சரவையை அமைத்து தீர்வு காணமுடியாது. மாறாக அனைத்துக் கட்சிகளையும் இணைத்து இடைக்கால நிர்வாகத்தை அமைக்க வேண்டும்.

இது ராஜபக்சர்களின் நாடு அல்ல.

நாட்டை ஒரு குடும்பத்துக்காக விட்டுக் கொடுத்து நித்திரையில் ஆழ்ந்திருக்க முடியாது என்றும் அனுர பிரியதர்சன யாப்பா குறிப்பிட்டார். (ம-7)

## கோரிக்கைகளை...

யுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் நிலைமை மேலும் மோசமடையும் என அவர் எச்சரித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து கருத்து தெரிவித்த அவர், ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து செயற்படமாட்டோம் என எதிர்க்கட்சிகள் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது என்றார்.

எனவே, அரசாங்கத்தின் கட்சித் தலைவர்கள் மற்றும் அண்மையில் அரசாங்கத்தை விட்டு வெளியேறியவர்களும் அரசியல் முட்டுக்கட்டைகள் குறித்த தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள், ஏனைய கட்சித் தலைவர்கள் கூடி நெருக்கடி குறித்து இறுதித் தீர்மானத்திற்கு வரவேண்டும் என்றும், நாட்டின் நிலைமையை பாராளுமன்றம் கட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நாட்டின்...

கப்பட்டது.

யாழ். பருத்தித்துறை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன.

மேலும், தனியார் பஸ் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

வவுனியா - செட்டிகுளத்திலும் வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களை மூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரும் நேற்று வர்த்தக நிலையங்களை மூடியுள்ளனர். (ம-7)

## 20 பேர்...

டுள்ளது என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரம்புக்கனை சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் மூவர் கொண்ட விசேட குழுவொன்றை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜனாதிபதி...

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே சஜித் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்களும் சென்று ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கூறினால் தான் பதவி விலகத் தயார் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக் கூட்டத்தின்போது சபாநாயகர் இந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தார். இதனை மேற்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த விடயத்தைக் கூற தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## சுமார்...

வீடொன்றிலேயே இந்த திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

விரிவுரையாளரது குடும்பம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் உறவினர் வீட்டுக்குச் சென்று இரவு 8.30 மணிக்கு வீடு திரும்பிய இடை நேரத்தில் திருட்டு இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 50 பவுண் தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளன என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் விரிவுரையாளரது வீட்டிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## 'நீங்கள்...

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் நேற்று கடும் வாதப் பிரதிவாதங்கள் பாராளுமன்றில் இடம்பெற்றிருந்தன. இந்நிலையில் ஜனாதிபதி பதவி விலக தீர்மானித்துள்ளதாக, சபாநாயகருக்கு அறிவித்துள்ளார் என சமூகவலைத்தளங்களில் பகிரப்படும் தகவல் உண்மைக்கு புறம்பானது என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

113 பெரும்பான்மையை நிரூபிப்பவர்களுக்கு ஆட்சியை கையளிக்க தயாரென ஜனாதிபதி முன்னதாக அறிவித்திருந்தார். அதில் எந்த மாற்றமும் இல்லையென சபாநாயகர் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன முன்னிலையில் கூறிய ஒரு விடயத்தை சபாநாயகர் தற்போது பொய்யானது என்று மறுக்கிறார்.

எனவே, சபாநாயகர் பொய்யுரைக்கிறார் என்றே நான் கூற வேண்டும் என தெரிவித்தார்.

இதன்போது, கருத்துவெளியிட்ட சபாநாயகர், அது தொடர்பில் சஜித் பிரேமதாஸ தவறான புரிதலை கொண்டுள்ளதாகவும், அவர் அதனை திரிபுபடுத்திக் கூறுவதாகவும் தெரிவித்தார்.

இதனை மறுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித், தொடர்ந்தும் சபாநாயகர் பொய்யுரைப்பதாகவும், அவர் கூறிய விடயத்தையே தான் இங்கு எவ்வித திரிபும் இன்றி முன்வைத்தேன். தற்போது அதனை மாற்றிக்கூறும் நீங்கள் சபாநாயகர் அல்ல; பொய்யர். ஆசனத்தை அவமதிக்கும் செயலில் ஈடுபடவேண்டாம் என்றார். (ம-7)

## 12ஆவது...

பாகங்களில் நேற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.


இதன்போது ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டன. அரச பயங்கரவாதம் மூலம் போராட்டத்தை ஒடுக்க முடியாது என மக்கள் கோஷங்களை எழுப்பினர்.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலில் 12 ஆவது நாளாகவும் நேற்றும் போராட்டம் தொடர்ந்தது. (ம-7)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நலன்களுக்காக சிறப்புரிமையை அர்ப்பணியுங்கள்

## மகாநாயக்க தேரர்கள் கூட்டறிக்கை

- புதிய அமைச்சரவையால் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்காது.
- பொருளாதார நெருக்கடிக்கு அடுத்துவரும் அரசு பொறுப்பேற்க வேண்டும்.
- மக்களுக்கு நிவாரணம் வழங்கும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் சங்க கட்டளை பிறப்பிக்க நேரிடும்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் தமது சிறப்புரிமைகளை மக்களின் நலனுக்காக அர்ப்பணிக்க வேண்டுமென மகாநாயக்க தேரர்கள் ஒன்றிணைந்து கூட்டறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் இந்த கூட்டறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

திப்பட்டுவாவே சுமங்கல மல்வத்து பீடத்தின் தலைவர், வரகாகொட ஸ்ரீ ஞானதாரன அஸ்கிரிய பீடத் தலைவர், ஸ்ரீ லங்கா அமரபுர மகா நிகாயாவின் தொடம்பஹல ஸ்ரீ சந்திரசிறி, மகுலேவே விமல ஸ்ரீ லங்கா ரமதான மகான நிகாயா தேரர் ஆகியோர் இணைந்து குறித்த கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

மேலும், 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி மக்களுக் கான உடனடி நிவாரணம் கோரி ஜனாதிபதிக்கு முன்வைக்கப்பட்ட தமது முன்மொழிவுகள் புறக்கணிக்கப்பட்ட மைக்கு மகாநாயக்கர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதிய அமைச்சரவையை நியமிப்பதன் மூலம் நெருக்கடிகளுக்கு தீர்வு கிடைக்காது என மகாநாயக்கர்கள் உறுதியாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி உயிரிழந்த ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரின் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்த மகாநாயக்கர்கள், இலங்கையில் அவ்வாறானதொரு துரதிர்ஷ்டமான சூழல் உருவாக்கப்படாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தினதும் ஏனைய அனைத்து உறுப்பினர்களின் பொறுப்பு எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும்,நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அடுத்தடுத்து வரும் அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும் என இலங்கையின் மூன்று பிரதான பௌத்த பிரிவைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பிரேரணைகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுமானால், மூன்று பிரிவினரையும் ஒன்றிணைத்து சங்க ஆணை பிறப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என மகாநாயக்க தேரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11073)

**076 825 7716** (ஆகாஸ்)



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் தென்னைகள் உள்ளன.

(11102)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000

**ஜெயம் - 077 814 7389**
**077 241 7589**


# ஆர்ப்பாட்டத்தின் இடையே சிக்கிக்கொண்ட மாவை

## எச்சரித்து அனுப்பி வைப்பு

(சிலாபம்)

எரிபொருள் விலையேற்றத்தினை கண்டித்து சிலாபத்தில் வீதியினை மறித்து முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் போராட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அவ்வழியே பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பயணித்த வாகனம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் வழி மறிக்கப்பட்டது.

இதன்போது வாகனத்தில் பயணித்த தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை அடையாளம் கண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மாவை சேனாதிராசாவிடம் பாராளுமன்ற உறுப்பினர் என்று கூறவேண்டாம் என்றும் கூறின் மக்கள் தாக்குவார்கள் எனவும் அவரது மெய்ப்பாதுகாவலரிடம் வாகனத்தை எங்கும் நிற்காது எடுத்துச் செல்லுமாறும் எச்சரித்து அனுப்பி வைத்தனர். (ம-7)


**வேலை வாய்ப்பு**

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள TILKO HOTEL இல் பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Cashier
- General Technician
- Kitchen Helper
- House Keeping Staff
- Receptionist
- Laundry Assistant

(11106)

- 077 905 3923
Email : Sujithan.tilko@gmail.com



**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும்**

எதிர்வரும் 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் 15.05.2022 ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இடம் : சபாலிங்கம் அரங்கு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
காலம் : 15.05.2022 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி

புதிய நிர்வாகக் குழுவுக்கான நியமனப் பத்திரங்களை புதிதாகக் கோரும்படி பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எம்மை எழுத்து மூலம் கோரியதன் காரணமாக தேர்தல் குழுவின் தீர்மானத்திற்கமைய பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டு புதிய திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

**நியமனப் பத்திரம் தொடர்பான விபரங்களை பழைய மாணவர் சங்க (www.jhcobajaffna.com) இணையத்தளத்தில் பார்வையிடலாம்.** (C-4205)

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS** (C-4207)

எமது கிளைகள்

• பயிற்சிக்கால கைக்கத்தொகை -15'000/-
• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
• வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



PERSONAL & GROUP CLASSES

2022 BATCH **LOGIC** 5 மாத வகுப்பு

- ஆரம்பத்திலிருந்து முழுமையாக!
- ஆரம்பம் : 25.04.2022
- 2023 BATCH நடைபெறுகிறது!

**S.S. மனோகரன்**

இராஜ வீதி, திருநெல்வேலி, கல்வியங்காடு.
(திருமணப்பதிவாளர் வீட்டிற்கு முன்பாக) (11084)



**காணி தேவை**

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு உட்பட்ட உறுதிக்காணி (வயல்) தேவைப்படுகிறது.
விற்பனை செய்ய விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும். (11105)

**077 330 1798**



**வான்கோழிக் குஞ்சுகள்**

1 நாள் குஞ்சு - 350/=
1 கிழமை குஞ்சு - 400/=
ஊர்க் குஞ்சு - 100/= (11090)

பண்ணாகம்
**077 332 2433**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.